**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தமிழக அரசின் இணையவழி சூதாட்ட தடைச் சட்டம் செல்லும்

## ரம்மி, போக்கருக்கு அனுமதி; சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பு

**சென்னை, நவ. 9:** இணையவழி சூதாட்டங்களுக்கு தடை விதித்து தமிழக அரசு கொண்டுவந்துள்ள சட்டம் செல்லும் என்று சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதேவேளையில், திறமைக்கான இணைய விளையாட்டுகளான ரம்மி, போக்கர் ஆகியவற்றை அனுமதிக்கும் வகையில், அவற்றைத் தடை செய்த பிரிவுகளை ரத்து செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

தமிழக அரசு நிறைவேற்றிய இணைய சூதாட்ட தடைச் சட்டத்தை எதிர்த்து, அகில இந்திய விளையாட்டு கூட்டமைப்பு நிறுவனங்கள் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்குகளை விசாரித்த உயர்நீதிமன்றம் தமிழக அரசு பதிலளிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு விசாரணையின் போது, இணைய விளையாட்டு நிறுவனங்கள் தரப்பில், இந்தச் சட்டத்தை இயற்ற தமிழக அரசுக்கு அதிகாரமில்லை. திறமைக்கான விளையாட்டான ரம்மியை, அதிர்ஷ்டத்துக்கான விளையாட்டாகக் கருத முடியாது என வாதங்கள் முன் வைக்கப்பட்டிருந்தன.

தமிழக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில், இந்திய அரசியல் சாசனம் வழங்கியுள்ள அதிகாரத்துக்கு உட்பட்டு இயற்றப்பட்டுள்ள இந்தச் சட்டம் செல்லுபடியாகக் கூடியது. பொது அமைதி, சுகாதாரம், சூதாட்டம் தொடர்பாக மட்டுமே இந்தச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை இயற்ற தமிழக அரசுக்கு முழு அதிகாரம் உள்ளது.

இணைய விளையாட்டுகள் காரணமாக வேலையில்லாத இளைஞர்கள், தினக்கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள், போலீஸ் என 32 பேர் தற்கொலை செய்து கொண்ட நிலையில், இந்தச் சட்டம் அவசியமாகிறது என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த வழக்குகளில் அனைத்துத் தரப்பு வாதங்களும் முடிவடைந்த நிலையில் தீர்ப்புக்காக இந்த வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தன.



இந்த வழக்கில் தலைமை நீதிபதி கங்காபுர்வாலா, நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வு வியாழக்கிழமை பிறப்பித்த தீர்ப்பில், அதிர்ஷ்டத்துக்கான இணைய விளையாட்டுகளைத் தடை செய்து தமிழக அரசு நிறைவேற்றிய இணைய வழி சூதாட்ட தடைச் சட்டம் செல்லும்; எனினும், திறமைக்கான இணைய விளையாட்டுகளான ரம்மி, போக்கர் ஆகியவற்றைத் தடை செய்த பிரிவுகள் ரத்து செய்யப்படுகின்றன. அதே நேரம், திறமைக்கான இணைய விளையாட்டுகளான ரம்மி போன்றவற்றை விளையாடுவதற்கான நேரம், வயது தொடர்பாக விதிகளை உருவாக்க அரசுக்கு அனுமதியளிக்கப்படுகிறது என நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்; தொடர்ந்து, தமிழக அரசின் இணைய சூதாட்டம் தடைச் சட்டத்துக்கு எதிராக இணைய விளையாட்டு நிறுவனங்கள் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

**இணையவழி சூதாட்ட தடைச் சட்டம்:** தமிழ்நாடு இணையவழி சூதாட்ட தடை, ஒழுங்குபடுத்துதல் சட்டம் கடந்த 2022-ஆம் ஆண்டு அக்டோபர் 19-ஆம் தேதி நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. அந்த மசோதாவை கடந்த மார்ச் 6-ஆம் தேதி தமிழக அரசுக்கு ஆளுநர் திருப்பி அனுப்பினார். கடந்த மார்ச் 23-ஆம் தேதி சட்டப்பேரவையில் மசோதா மீண்டும் நிறைவேற்றப்பட்டு மறுநாளே ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இணையவழி சூதாட்ட தடைச் சட்ட மசோதாவுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி கடந்த ஏப்ரல் 10-ஆம் தேதி ஒப்புதல் அளித்தார். இதையடுத்து ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டம் உடனடியாக அரசிதழில் வெளியிடப்பட்டு அமலுக்கு வந்தது.

**தண்டனை விவரம்:** இந்தச் சட்டத்தின்படி, இணைய விளையாட்டில் ஈடுபடுவோருக்கு 3 மாதங்கள் சிறை அல்லது ரூ.5,000 அபராதத்துடன் சிறைத் தண்டனை விதிக்கப்படும். இணைய வழி விளையாட்டுக்காக விளம்பரம் செய்வோருக்கு ஓராண்டு சிறை அல்லது ரூ.5 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும். இதுபோன்ற விளையாட்டுகளை அளிப்பவர்களுக்கு 3 ஆண்டுகள் சிறை அல்லது ரூ.10 லட்சம் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும். இவர்கள் மீண்டும் தவறு செய்தால், 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை, ரூ.20 லட்சம் அபராதம் விதிக்கப்படும்.

# அறிவியலில் நம்பிக்கையை உருவாக்குவோம்!


நெல்லை சு. முத்து

அறிவியல், சமூக, அரசியல் பிரச்னைகள் குறித்த விவாதங்களில் பொதுமக்களையும் பரவலாக ஈடுபடுத்த வேண்டியதன் அவசியம் தற்போது எழுந்துள்ளது. இதற்கென ஆண்டுதோறும் நவம்பர் 10 அன்று அமைதிக்கும் வளர்ச்சிக்குமான உலக அறிவியல் நாள் கொண்டாடப்படுகிறது.

அறிவியலை சமூகத்துடன் நெருக்கமாக இணைப்பதன்வழி உலக அளவில் அமைதியையும் வளர்ச்சியையும் உருவாக்க வேண்டும் என்பதே இதன் நோக்கம். நம் அன்றாட வாழ்வில் அறிவியலின் முக்கியத்துவத்தையும் அடிப்படைத் தத்துவத்தையும் இந்நாள் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

2001-இல் 'யுனெஸ்கோ'வால் அறிவிக்கப்பட்ட உலக அறிவியல் தினம், அறிவியல் தரவுகளின் தொகுப்பாய்வினால் தொழில்நுட்ப மேம்பாட்டினை வலியுறுத்துவதைப் போலவே, அறிவியல் சிந்தனைகளின் பகுப்பாய்வு மனிதர்களின் அகநுட்பத்தையும் வளர்க்க உதவும்.

1999-ஆம் ஆண்டு ஹங்கேரியின் தலைநகரான புடாபெஸ்டில் நடைபெற்ற உலக அறிவியல் மாநாட்டின் விளைவுகளில் ஒன்றாக, அறிவியலுக்கும் சமூகத்திற்கும் அர்ப்பணிக்கத்தகும் நிகழ்ச்சிகளை ஆண்டுதோறும் கொண்டாட வேண்டும் என்ற பிரகடனம் வெளியானது.

அந்த வகையில் 'நிலையான வளர்ச்சிக்கான அடிப்படை அறிவியல்' (2022), 'காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளத் தயாரான சமூகங்களை உருவாக்குதல்' (2021), 'உலகளாவிய நிலையில் தொற்றுநோயைக் கையாள்வதில் சமூகம் மேற்கொள்ள வேண்டிய அறிவியல் பொறுப்புகள்' (2020), 'யாரையும் விலக்கிப் பார்க்காத வெளிப்படையான அறிவியல்' (2019), 'அறிவியல் ஒரு மனித உரிமை' (2018), 'உலகளாவிய புரிதலுக்கான அறிவியல்' (2017), 'அறிவியல் மையங்களையும் அறிவியல் அருங்காட்சியகங்களையும் கொண்டாடுதல்' (2016), 'நிலையான எதிர்காலத்திற்கான அறிவியல்' (2015), 'தரமிக்க அறிவியல் கல்வியினால் அனைவருக்கும் நிலையான எதிர்காலத்தை உறுதி செய்தல்' (2014), 'நீர் ஆதார ஒத்துழைப்புக்கான அறிவியல் தரவு, அறிவுப் புதுமைகளைப் பகிர்தல்' (2013), 'உலகளாவிய நிலைத்தன்மைக்கென பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு, உருமாற்றும் ஊட்டும் அறிவியல்' (2012) - போன்ற சிறப்பு நோக்கங்கள் கடந்த சில ஆண்டுகளில் வெளியிடப்பெற்றன.

இந்த ஆண்டு, உலக அறிவியல் தினம் 'அறிவியலில் நம்பிக்கையை உருவாக்குதல்' என்ற கோட்பாட்டில் கவனம் செலுத்துகிறது. அறிவியலில் நம்பிக்கை என்பது ஒரு சிக்கலான பிரச்னை. இது விஞ்ஞானிகள் செயல்படும் விதத்தை பாதிக்கிறது. மேலும், அறிவியலில் நம்பிக்கை இருந்தால்மட்டுமே நமது எதிர்காலத்தை வடிவமைப்பதில் அறிவியலின் பங்கை உறுதிப்படுத்த முடியும்.

1920-களிலேயே, அறிவியலைத் தேடித் தேடிப் படித்து அவற்றைத் தமிழில் தத்தவர் சட்டம் படித்த எழுத்தாளர் பெ.நா. அப்புசாமி. 1936-இல் காற்றடைத்த ராட்சச பலூன்களில் நடத்திய விண்வெளி யாத்திரை பற்றி உற்சாகத்தோடு எழுதிய அப்புசாமி, துணைக்கோள் (ஜியோஸ்டேஷனரி சாட்டிலைட்) பற்றி 1965-இல் அதே உற்சாகத்தோடு எழுதினார். அன்று பலரும் கிராமபோனில் பாட்டு கேட்டுக் கொண்டிருந்தபோது, அந்தப் பெட்டி எப்படிப் பாடுகிறது என்று படம் வரைந்து எளிமையாக விளக்கியவர் அப்புசாமி.

நவீன அறிவியல் கோட்பாடான 'மேதைமை அமைப்பு' (எக்ஸ்பெர்ட் சிஸ்டம்) அடிப்படையில் இயங்கும் மின்னணு மொழிபெயர்ப்பு பற்றி 1960-களில் தமிழில் முதலில் இவர்தான் எழுதினார்.

அது மட்டுமன்று, கணினிப் புரட்சி உருவாவதற்கு இருபது ஆண்டுகளுக்கு முன்னரே, 1969-ஆம் ஆண்டில் 'நாம் வாழும் யுகம் கம்ப்யூட்டர் யுகமாகிக்கொண்டு வருகிறது' என்று கூறிய தீர்க்கதரிசி அவர்.

அறிவியல் தரும் செய்தித்துறையாக இன்றைக்கு விண்வெளித்துறை மட்டுமே ஊடகங்களால் அடையாளம் காணப்படுகிறது. அதிலும் சில நேரங்களில் வணிக நோக்கில் செயல்படும் 'கருவி' விஞ்ஞானிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள். அரசியல்வாதிகளாகவே மாறிவிடும் அறிமேதாவிகளும்

> **இந்த ஆண்டு, அமைதிக்கும் வளர்ச்சிக்குமான உலக அறிவியல் நாள் 'அறிவியலில் நம்பிக்கையை உருவாக்குதல்' என்ற கோட்பாட்டில் கவனம் செலுத்துகிறது. அறிவியலில் நம்பிக்கை என்பது ஒரு சிக்கலான பிரச்னை. இது விஞ்ஞானிகள் செயல்படும் விதத்தை பாதிக்கிறது.**

அறிவியல் துறைகளில் உள்ளனர்.

விஞ்ஞானி எம்.ஜி.கே. மேனன் 20 ஆண்டுகளுக்கு முன் 'சயன்ஸ்' இதழில் (25-10-2022) தெரிவித்த கருத்து, நாட்டின் தற்போதைய அறிவியல் வளர்ச்சிப் போக்கினை விவரிக்கிறது. அந்நாளில் அமெரிக்க தேசிய அறிவியல் அறக்கட்டளையினால் தொகுக்கப்பட்ட தரவுகளின்படி, இயற்கை அறிவியல் மற்றும் பொறியியலில் முதன்மையான பட்டதாரிகளின் சதவீதத்தில் சீனா உள்ளிட்ட பிற ஆசிய நாடுகளை விட இந்தியா மிகவும் பின்தங்கியது.

பல்கலைக்கழக ஆராய்ச்சிக்கான அரசின் நிதியுதவி தேக்கமடைந்து வருகிறது. இதன் விளைவாக ஆக்கபூர்வ அறிவியல் பார்வையில் ஒருவித சரிவு ஏற்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, விஞ்ஞான ஆய்வு வெளியீடு பற்றிய சமீபத்திய சர்வதேச ஆய்வில், அறிவியல் பன்னாட்டு இதழ்களில் வெளிவந்த இந்திய ஆராய்ச்சிக் கட்டுரைகளின் எண்ணிக்கை 1980-ஆம் ஆண்டு முதல் 24% குறைந்துள்ளது.

அத்துடன், உலகின் இரண்டாவது அதிக மக்கள்தொகை கொண்ட நம் நாட்டின் ஆய்வு மதிப்பீடும் உலகளாவிய தரவரிசையில் எட்டாவது இடத்தில் இருந்து 15-ஆவது இடத்திற்கு இறங்கிவிட்டது.

மேலும், இந்திய ஆராய்ச்சிக் கூடங்களில் தலைமைப் பொறுப்புக்கான நெருக்கடி தவிர்க்க முடியாததாகி வருகிறது.

சீனா, தைவான், தென்கொரியா, சிங்கப்பூர் போன்ற ஆசிய நாடுகள், வெளிநாட்டில் பணிபுரியும் தங்கள் நாட்டு ஆராய்ச்சியாளர்களின் திறமைகளைத் தேடிக்கண்டறிந்து பயன்படுத்த முயல்கின்றன. அந்த அணுகுமுறை, சோர்வுற்ற ஆய்வு நிறுவனங்களுக்கு புது ரத்தம் பாய்ச்சுவதற்கும், சர்வதேச ஒத்துழைப்புகளை வளர்ப்பதற்கும் ஏற்ற வழியாக இருக்கும்.

ஆனால், இந்தியாவில் இந்த வியூகம் சர்ச்சைக்குரியதாக அமையும். இங்குள்ள விஞ்ஞானிகள் அத்தகைய அயல்நாடுவாழ் இந்தியர்களை இங்கு பணியமர்த்துவது, உள்நாட்டு திறமைகளை சந்தேகப்படுவது போல் ஆகும் என்று கருதுகின்றனர்.

இந்தியாவில் பணிபுரியும் சிறந்த திறமைக் திறன் கொண்ட விஞ்ஞானிகள், ஊதியக் குறைபாடு காரணமாக இங்குள்ள ஆய்வுக் கூடங்களில் பணியாற்ற முன்வருவதில்லை என்பதும் இந்திய விண்வெளித்துறைத் தலைவரின் கருத்தாக உள்ளது.

இதில் இன்னொரு செய்தியும் உள்ளது. பாதுகாப்பு மேலாண்மை, அணுசக்தி, விண்வெளித் துறைகளில் தலைமைப் பொறுப்பில் இருப்போர்க்கு பதவி நீட்டிப்புகள் வழங்கப்படுவது வழக்கமாகிவிட்டது.

அதனால், புதுமையை விரும்பும் சிந்தனைத்திறன் மிக்க விஞ்ஞானிகள், மனநிறைவின்றி ஓய்வுக்குப் பணியாற்றும் நிலைக்குத் தள்ளப்படுகிறனர். அதிலும், மொழி, இன, மத பிரச்னை ஏதுமின்றி, அறிவியல் ஒன்றே நமக்குப் பெருமிதம் என்று வாழும் அறிஞர்களும் ஆட்சியாளர்களைத் துதிபாடி, பணி ஓய்வுக்குப் பிறகும், புதிய அதிகாரப் பொறுப்புகளில் சகல வசதிகளுடன் வாழ விரும்பும் தன்னலவாதிகளாகி விடுகின்றனர்.

அறிவியல் மீது நம்பிக்கை வைப்பது குறித்த எண்ணத்தை நம்மிடையே எழுப்புவது முக்கியம்.

உண்மையில் எதார்த்த அறிவியல் கூட, கவிதை போல் உள்ளுணர்வு சார்ந்த விஷயமே. கவிஞராக பரிணமித்த பாரதியாருக்குள் அறிவியல் கனவு இருந்தது. கணக்காளராகப் பணியாற்றிய சர் சி.வி. ராமனுக்குள் ஒரு விஞ்ஞானி வாழ்ந்தார். டாக்டர் அப்துல் கலாமிடம், சோதிடம் பற்றி கேட்டபோது, 'அந்தந்த கோள்கள் அதனதன் பாதையில் இயல்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன' என்றுதான் பதில் உரைத்தார்.

ஒவ்வொரு மனித உடலில் ஒன்றரை கிலோ மூளைக்குள் அடங்கியுள்ள வேதிம பொருட்களும், உயிரி மூலக்கூறுகளும் கோடிக்கணக்கானவை. அவற்றின் இடைவினைகளும் எண்ணற்றவை. அந்த வகையில், அணுக்களின் தொகுப்பான பொருள் வடிவம் உடம்பு. அது தூலமானது; தொட்டு உணரக் கூடியது. அணுக்களின் இடைவினைகள் வெளிப்படுத்தும் ஆற்றல் வடிவம், உயிர்; தொடாமல் அறியக் கூடியது. 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்று உடலுக்கும் உயிருக்கும் சார்புநிலையை உருவாக்குவது மனித சிந்தனை மட்டுமே.

இத்தகைய ஐயங்களுக்கு அறிவியலாளரே விடை சொன்னாலும், அதில் 'மெய்ப்பொருள்' காண நாம் முயல வேண்டும். அமெரிக்க டாலரில் 'இன் தி நேம் ஆஃப் காட் வி ட்ரஸ்ட்' என்று குறித்து, கடவுள் மீது 'நம்பிக்கை' வைத்தே அதனைப் புழங்க விட்டுள்ளனர். நாமோ, வேண்டிய காரியம் நடந்தாலும் நடக்கவில்லை என்றாலும் கடவுள் மீது வைக்கும் 'பிலீஃப்' (நம்பிக்கை) வைக்கிறோம்.

அதிலும் நடக்காததை நடக்கும் என்று எண்ணுகிற நம்பிக்கை நமக்குள் இருக்கும் சித்தாந்தத்தோடு ஒத்துப்போவதால் அந்த நம்பிக்கை (பிலீஃப்), ஒரு வகையில் மூடநம்பிக்கை ஆகுமல்லவா?

பழைமையான நம்பிக்கையில் இருந்து விடுபட்டால்தான் வாழ்வில் எதிர்காலத்திற்கான நம்பிக்கை பிறக்கும். அதுவே தன்னம்பிக்கைக்கும் அப்பால் தன்னம்பிக்கையாக மாறும். இன்று அறிவியலில் அந்தகைய தன்னம்பிக்கை அனைவருக்கும் அவசியம். பழைமைவாதத்தை விட்டு விடுதலையாகிப் பறப்பவர்க்கே மனத்தில் அமைதி உண்டாகும்.

அந்த வகையில் அமைதிக்கும் வளர்ச்சிக்குமான அறிவியல் என்ற தலைப்பில் அறிஞர்கள், அரசாங்க அதிகாரிகள், பள்ளி-கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற அனைவரையும் ஒன்றிணைக்க யுனெஸ்கோ ஊக்கம் அளிக்கிறது.

இதற்கென உலகம் முழுவதும் அறிவியலுக்கான உறுதியான திட்டங்களும் வகுக்கப்பட்டன. குறிப்பாக, இஸ்ரேலிய-பாலஸ்தீனிய விஞ்ஞானிகளுக்கும், அறிஞர்களுக்கும் இடையே அறிவியலில் ஒத்துழைப்பினை வளர்க்க 'இஸ்ரேலிய-பாலஸ்தீனிய அறிவியல் அமைப்பு' (இப்சோ) யுனெஸ்கோவால் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே ஜெருசலேமில் உருவாக்கப்பட்டது என்பது வியப்பிலும் வியப்பாகும்.

**இன்று (நவ. 10) அமைதி - வளர்ச்சிக்கான உலக அறிவியல் நாள்.**

கட்டுரையாளர்:
**இஸ்ரோ விஞ்ஞானி (ஓய்வு).**

# பயணிகள் படும் பாடு!

சென்னையின் பரப்பளவு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் சுமார் 72 சதுர கி.மீ. மட்டுமே. மக்கள்தொகை 5 லட்சம்தான். ஆனால், இப்போது சென்னை எல்லா திசைகளிலும் பரந்துவிரிந்து 426 சதுர கி.மீ. என ஆகி இருக்கிறது. சுமார் ஒரு கோடி மக்கள் வசிக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் வாழ்வாதாரம் தேடி மற்ற மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள்.

இதுபோன்ற நிலை சென்னைக்கு மட்டும்தான் என கருத வேண்டாம். நகரங்களை நோக்கி மக்கள் இடம்பெயர்வது எல்லா மாநகராட்சிகளிலும் உள்ளது. இனியும் இது தொடரும்.

சென்னையை ஒப்பிடும்போது மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு உள்ள கோவையில் காந்திபுரம் (இரண்டு), சிங்காநல்லூர், உக்கடம், சாய்பாபா காலனிஆகிய இடங்களில் பேருந்து நிலையங்கள் உள்ளன. மதுரையில் எம்ஜிஆர் (மாட்டுத்தாவணி), பெரியார், ஆரப்பாளையம் பேருந்து நிலையங்கள் பல்லாண்டுகளாக செயல்பாட்டில் உள்ளன.

சென்னையில் பிராட்வே பேருந்து நிலையம் சிறியதாக இருந்ததால், கோயம்பேட்டில் 37 ஏக்கர் பரப்பளவில் ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய பேருந்து முனையம் 2002-ஆம் ஆண்டில்தான் திறக்கப்பட்டது. இந்தப் பேருந்து முனையம் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் என கருதப்பட்ட நிலையில் எதிர்பார்த்த அளவுக்குப் பலன் கிடைக்கவில்லை.

இதையடுத்து, திருப்பதி, நெல்லூர் போன்ற ஆந்திர பகுதிகளுக்குப் பேருந்துகளை இயக்க மாதவரத்தில் 8 ஏக்கர் பரப்பளவில் 2018-ஆம் ஆண்டில் பேருந்து முனையம் திறக்கப்பட்டது. இவற்றுடன் தாம்பரம் சானடோரியத்திலும் பேருந்து நிலையம் செயல்பட்டு வருகிறது.

வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் 88 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டு வரும் பேருந்து முனையம் 2012-இல் அறிவிக்கப்பட்டு, 2019-இல் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வரும் நிலையில் விரைவில் பயன்பாட்டுக்கு வர உள்ளது. திருமழிசை அருகே குத்தம்பாக்கத்திலும் 25 ஏக்கர் பரப்பளவில் பேருந்து முனையம் அமைக்கப்பட்டு வருகிறது.

பேருந்து முனையங்கள் அமைத்தல், பேருந்துகள் கொள்முதல் என அரசு எவ்வளவு திட்டமிட்டாலும் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப இல்லாததால் யானைப் பசிக்கு சோளப்பொரி என்பதுபோல ஆகிவிடுகிறது. நிதிநிலைமை காரணமாக, போதுமான அளவு புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படுவதில்லை. அதனால், பண்டிகைக் காலங்களில் அறிவிக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை போதுமானதாக இருப்பதில்லை.

சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டாலும் அவற்றின் முன்பதிவு, தொடங்கிய ஓரிரு நிமிடங்களில் முடிந்துவிடுகிறது. அரசுப் பேருந்துகள் போதுமானதாக இல்லாததால் ஆயிரக்கணக்கானோர் தனியார் பேருந்துகளை நாடுகின்றனர். தனியார் ஆம்னி பேருந்துகளில் வார இறுதி நாள்களில் அதிக கட்டணமும், பண்டிகை காலங்களில் மிக அதிக கட்டணமும் வசூலிக்கப்படுகிறது என்கிற குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே இருந்து வருகிறது.

அண்மையில் ஆயுத பூஜை சமயத்தில் போக்குவரத்துத் துறை அதிகாரிகள் சோதனை நடத்தி விதிமீறலில் ஈடுபட்ட தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு ரூ.27 லட்சம் அபராதம் விதித்தனர். 100-க்கும் மேற்பட்ட பேருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதையடுத்து, போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கருடனான ஆலோசனைக்குப் பின்னர் தீபாவளிக்கு சென்னையில் இருந்து இயக்கப்படும் தனியார் பேருந்துகளுக்கு குறைந்தபட்ச, அதிகபட்ச கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. கடந்த தீபாவளி, பொங்கல் பண்டிகைகளின்போது குறைக்கப்பட்ட 25% கட்டணத்துடன் மேலும் 5% சேர்த்து 30% குறைத்துக் கொள்வதாக ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர். அது நடைமுறைப்படுத்தப்படுவதை அரசு உறுதிசெய்ய வேண்டும்.

தீபாவளிப் பண்டிகை நவம்பர் 12-ஆம் தேதி கொண்டாடப்பட இருப்பதால், வழக்கமாக இயக்கப்படும் பேருந்துகள் தவிர, சென்னையில் இருந்து வெளியூர்களுக்கு நவம்பர் 9-ஆம் தேதி 550 பேருந்துகள், 10-ஆம் தேதி 600 பேருந்துகள், 11-ஆம் தேதி 700 பேருந்துகள் என மொத்தம் 1,850 பேருந்துகள் இயக்கப்படும் என தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர் அறிவித்துள்ளார். இதேபோல, தீபாவளி முடிந்து சென்னை திரும்ப வசதியாக நவம்பர் 13-ஆம் தேதி தொடங்கி 3 நாள்களில் மொத்தம் 900 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். எல்லா ஊர்களில் இருந்தும் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட உள்ளன.

அதிக அளவில் அரசு, தனியார்பேருந்துகள் இயக்கப்படுவதும், இரு சக்கர வாகனங்கள், மகிழுந்துகள், சிற்றுந்துகள் என மக்கள் தத்தம் சொந்த ஊர்களுக்கு பயணிப்பதும், பண்டிகைக் காலங்களில் தவிர்க்க முடியாதவை ஆகிவிட்டன. இதற்குத் தீர்வு ஒன்று மட்டும்தான் - அதிக அளவில் சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவது.

நமது நாட்டில் பொதுமக்கள் ஒழுங்குமுறையைக் கடைப்பிடிக்காததால், பண்டிகை நேரங்களில் பேருந்துகளில் இடம்பிடிப்பது மிகப் பெரிய சாதனையாகிவிடுகிறது. இதில் பெண்களும், முதியவர்களும், குழந்தைகளும் படும் பாடு சொல்லி மாளாது. பண்டிகைக் காலங்களில் அதிகரிக்கும் வாகனங்களால் நெடுஞ்சாலைகளில் நெரிசல் காரணமாக காலதாமதமும், ஆங்காங்கே விபத்துகளும் நடைபெறுவது வழக்கமாகிவிட்டது.

பண்டிகைகள் கொண்டாடப்படுவதே மக்கள் மகிழ்ச்சியாக இருக்கத்தான். ஊருக்குச் செல்வதே பெரும்பாடு என ஆகிவிடாமல் இருக்குமாறு, பயணங்கள் இனிமையாக இருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

EVA STALIN IAS ACADEMY

# பணி நேரமும் உற்பத்தித் திறனும்

முனைவர் செ. சரத்

அண்மையில் இன்ஃபோசிஸ் நிறுவனர் நாராயணமூர்த்தி, இந்தியாவின் உற்பத்தித்திறன் குறைந்துள்ளதால் வாரத்திற்கு 70 மணி நேரம் இளைஞர்கள் உழைக்க வேண்டும் என்று தெரிவித்ததுடன், உற்பத்தி திறனை அதிகரித்தால் மட்டுமே, வளர்ச்சி அடைந்த நாடுகளுடன் நாம் போட்டியிட முடியும் எனவும் கூறியிருந்தார். அவரின் கருத்திற்கு ஆதரவும் எதிர்ப்பும் உருவாயின.

தற்போதைய நிலையில் எழுபது மணி நேர உழைப்பு மட்டுமே உற்பத்தித்திறனை அதிகரிக்கும் என்று உறுதியாக சொல்லி விட முடியாது. ஏனென்றால் உழைப்பை நேரடியாக உற்பத்தித் திறனோடு மட்டுமே ஒப்பிட முடியாத அளவிற்கு தொழில்நுட்பம் நாளும் வளர்ந்து வருகிறது.

சர்வதேச தொழிலாளர் கூட்டமைப்பு தரும் புள்ளிவிவரம், அதிகப்படியான வேலைநேரம் உற்பத்தித்திறனை குறைக்கும் என்கிறது. அதாவது கரோனா தீநுண்மி காலகட்டத்தில் பணியாளர்களுக்கு உகந்த வேலை நேரத்தை உண்டாக்கித் தந்த காரணத்தால் அவர்களின் பணித்திறன் அதிகரித்ததுடன் குடும்பம், பணி என இரண்டிலும் சரி சமமான நேரத்தை அவர்களால் செலவழிக்க முடிந்தது என்கிறது அந்த ஆய்வு.

மேலும் தற்போது தொழிலாளர்களுக்கு இருக்கும் ஒரு நாளுக்கான எட்டு மணி நேரப் பணி என்பதும் எளிதாக வாய்க்கவில்லை. வரலாற்றை எடுத்துக் கொண்டால் 1800-களில் நாளொன்றிற்கு 15 மணி நேரத்திற்கு மேலாக தொழிலாளர்கள் அடிமை போல் பணியாற்றி உள்ளனர். பின்பு தொழிலாளர்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக 12 மணி நேரமாக அது மாற்றம் பெற்றது.

அதன் பின் சர்வதேச தொழிலாளர் கூட்டமைப்பு 1919-இல் பணி நேரத்தை எட்டு மணி நேரமாக நிர்ணயம் செய்தது. அதுவே வாரத்திற்கு ஒரு தொழிலாளியின் சராசரி பணி நேரமாக 48 மணி நேரம் என்றானது. அதாவது ஒரு நாளைக்கு எட்டு மணி நேர பணி, எட்டு மணி நேர ஓய்வு மற்றும் எட்டு மணி நேர உறக்கம் என்கிற வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

சில நாடுகளில் வாரத்திற்கு நான்கு நாட்கள் தினசரி 12 மணி நேர வேலை, மூன்று நாட்கள் விடுமுறை என்று இருப்பது போல் நமது மத்திய அரசு 2020-ஆம் ஆண்டு தொழிலாளர் வேலை சட்டத்தில் திருத்தமாக இதனை கொண்டு வந்தது.

அந்த வகையில் தமிழ்நாட்டில் 12 மணி நேர வேலை குறித்த மசோதா சில மாதங்களுக்கு முன்பு சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், இம்மசோதாவுக்கு பல தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக இம்மசோதா திரும்பப் பெறப்பட்டது.

மேலும் உலகளவில் எடுத்துக் கொண்டால் தொழிலாளர்களுக்கான வரையறை செய்யப்பட்ட பணி நேரத்தில் (48 மணி நேர வாரப் பணி) இந்தியா ஏழாவது இடத்தில் உள்ளது. அரபு நாடு வாரத்திற்கு 52.58 மணி நேரப் பணி என்கிற நிலையில் முதலிடத்தில் உள்ளது. அந்நாட்டில் 30 சதவீத மக்கள்தொகையினர் இந்தியாவை பூர்விகமாக கொண்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

'ஹார்வர்ட்' மேலாண்மை இதழில் வெளியான கட்டுரை ஒன்று, அமெரிக்காவில் அதிகரித்து வரும் பணி நேரத்திற்கு உகந்த பணியாளர்களாக இந்தியர்களும், சீனர்களும் உள்ளனர் என்று தெரிவிக்கிறது.

சரி, உண்மையாகவே உற்பத்தித்திறனுக்கும் அதிக நேர பணிக்கும் நேரடியானத் தொடர்பு உள்ளதா என்று மீண்டும் அலசினால் இல்லை என்றே கூறவேண்டியிருக்கிறது. பணியாளர்களுக்கான அதிக பணி நேரத்தைக் கொண்டிருக்கும் நாடுகளான கேம்பியா, பூடான், லீசொதோ, காங்கோ போன்ற நாடுகளில் உற்பத்தித்திறன் குறைவாகவே இருக்கிறது.

அதுவே அரபு நாடுகளிலும் கத்தாரிலும் அதிக அளவிலான தொழில் முதலீடுகள் இருக்கும் காரணத்தால் கூடுதல் பணி நேரத்திற்கு தகுந்த உற்பத்தித்திறன் இருக்கிறது. மற்றொருபுறம் நார்வே, டென்மார்க், பெல்ஜியம், சுவிட்ஸர்லாந்து போன்ற நாடுகளில் பணியாளர்களின் பணி நேரம் குறைவாக இருந்தாலும் உற்பத்தித்திறன் அதிகரித்து காணப்படுவதுடன் குடும்பம் - பணி என இரண்டிலும் சரிசமமான நேரத்தை அவர்களால் செலவிட முடிகிறது.

உதாரணத்திற்கு உலகளவில் அதிக பணி நேரத்தில் முதலிடம் வகிக்கும் அரபு நாட்டில் வாரத்திற்கு சராசரியாக 52 மணி நேர பணி மூலம் ஒரு மணி நேரத்திற்கு பணியாளர் உற்பத்தித்திறன் ஜிடிபி அளவில் 42.99 என்று உள்ளது. அதுவே ஏழாவது இடம் வகிக்கும் இந்தியாவின் 48 மணி நேரப் பணி மூலம் கிடைப்பது 8.47 ஜிடிபி-யாக உள்ளது.

உலகளவில் குறைந்த பணி நேரமான வாரத்திற்கு 29 மணி நேரத்தைக் கொண்டிருக்கும் ஆஸ்திரிய நாட்டின் பணியாளர் உற்பத்தித்திறன் ஜிடிபி அளவில் மணிக்கு 62.8 என்கிற விதத்தில் உள்ளது. மேலும் பல ஆய்வுகளும் குறைந்த பணி நேரம் பணியாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கிறது என்று கூறுகின்றன.

அதே சமயம் பணி நேரம் என்பது ஒவ்வொரு துறைக்கும் உற்பத்தித்திறனை வேறுபடுத்திக்காட்டும் என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆதலால் பணி நேர நீட்டிப்பு என்பது அந்தந்தத் துறைக்கு ஏற்ப மாறக்கூடியது ஆகும்.

மேலும், பணி நேரம் கூடும்போது அதற்கேற்ப ஊதியம் கூடாத நிலையில் பணியாளர்கள் மனதளவில் மிகுந்த பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். முதலில், பணி நேர நீட்டிப்பு என்பதே பணியாளர்களை மனதளவில் பாதிக்கும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். வாரத்திற்கு 50 மணி நேர பணியைக் காட்டிலும் 35 மணி நேர பணியே உற்பத்தித்திறனை பணியாளர்களிடத்தில் கூட்டுகிறது என்கிறது ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு முடிவு.

அதிலும் ஒரு நாளைக்கு இருக்கும் எட்டு மணி நேர பணி நேரத்தில் கூட கிட்டத்தட்ட இரண்டரை மணி நேரத்தை சமூக வலைதளங்களுக்கு பணியாளர்கள் செலவிடுவதாக ஓர் ஆய்வு முடிவு கூறுகிறது.

எனவே பணி நேரத்தை கூட்டுவதால் பணித்திறன் கூடும் என்பதற்கு எந்தச் சான்றும் இல்லை; அதற்கு மாற்றாக பணியாளர்களுக்கு தேவையான வசதிகளையும், அவர்களுக்கு உகந்த பணி சூழலையும் ஏற்படுத்திக் கொடுத்தாலே போதும். உற்பத்தித்திறன் நிச்சயம் அதிகரிக்கும்.

Activate Windows

EVA STALIN IAS

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# தேசிய விளையாட்டுப் போட்டிகள்: மகாராஷ்டிரம் சாம்பியன்; தமிழகம் 10-ஆம் இடம்




பிரனதி நாயக்கிற்கு சிறந்த வீராங்கனைக்கான கோப்பை வழங்கிய குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர்.

**பனாஜி, நவ. 9:** கோவாவில் வியாழக்கிழமை நிறைவடைந்த 37-ஆவது தேசிய விளையாட்டுப் போட்டிகளில் மகாராஷ்டிரம், ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் வென்றது.

அந்த அணி 80 தங்கம், 69 வெள்ளி, 79 வெண்கலம் என மொத்தமாக 228 பதக்கங்களுடன் பட்டியலில் முதலிடம் பிடித்து நிறைவு செய்தது.

சர்வீசஸ் 126 பதக்கங்களுடன் (66/27/33) இரண்டாம் இடமும், ஹரியாணா 192 பதக்கங்களுடன் (62/55/75/) மூன்றாம் இடமும் பிடித்தன.

கடந்த 2007 முதல் இப்போட்டியில் சாம்பியனாக கோலோச்சி வந்த சர்வீசஸ் அணியின் ஆதிக்கம் இந்த எடிஷனில் முடிவுக்கு வந்தது.

போட்டியை நடத்திய கோவா, 92 பதக்கங்களுடன் (27/27/38) 9-ஆம் இடம் பிடித்தது. தமிழக அணி 19 தங்கம், 26 வெள்ளி, 32 வெண்கலம் என 77 பதக்கங்களுடன் 10-ஆம் இடம் பிடித்தது. போட்டியின் கடைசி நாளில் துப்பாக்கி சுடுதலில், ஆடவர் டிராப் பிரிவில் தமிழகத்தின் பிருத்விராஜ் தொண்டைமான் 45 புள்ளிகளுடன் வெள்ளி பெற்றார்.

போட்டியிலேயே சிறந்த வீரராக கர்நாடக நீச்சல் வீரர் ஸ்ரீஹரி நட்ராஜ் தேர்வானார். அவர் 8 தங்கம், 1 வெள்ளி, 1 வெண்கலம் என 10 பதக்கங்கள் பெற்றிருந்தார்.

சிறந்த வீராங்கனையாக ஒடிஸாவின் ஜிம்னாஸ்டிக்ஸ் வீராங்கனைகள் சன்யுக்தா பிரசென் காலே, பிரனதி நாயக் ஆகியோர் தேர்வாகினர். இருவருமே தலா 4 தங்கம், 1 வெள்ளி என 5 பதக்கங்கள் கைப்பற்றியிருந்தனர்.

போட்டியின் நிறைவு நிகழ்ச்சியில் குடியரசு துணைத் தலைவர் ஜகதீப் தன்கர் கலந்துகொண்டு பரிசுகளை வழங்கினார்.

EVA STALIN IAS ACADEMY

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# வில்வித்தை: ஜோதிக்கு அதிர்ச்சி, பர்னீத் கௌருக்கு தங்கம்


ஜோதி, அதிதி, பர்னீத்

**பாங்காக், நவ. 9:** தாய்லாந்தில் நடைபெறும் ஆசிய வில்வித்தை சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் இளம் வீராங்கனையான பர்னீத் கௌர், அனுபவ வீராங்கனையான ஜோதி சுரேகாவை வீழ்த்தி தங்கப் பதக்கம் வென்று அசத்தினார்.

இப்போட்டியில் வியாழக்கிழமை நடைபெற்ற காம்பவுண்ட் மகளிர் தனிநபர் பிரிவு இறுதிச்சுற்றில் பர்னீத் - ஜோதி மோதல் முதலில் 145-145 என சமன் ஆனது. பின்னர் நடைபெற்ற டை பிரேக்கரில் பர்னீத் 9-8 என்ற கணக்கில் வெற்றி பெற்று, தனது முதல் சர்வதேச தங்கத்தை கைப்பற்றினார். அதிலேயே கலப்பு அணிகள் பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் அதிதி சுவாமி/பிரியன்ஷ் கூட்டணி 156 - 151 என்ற புள்ளிகள் கணக்கில் தாய்லாந்தை சாய்த்து தங்கத்தை தனதாக்கியது. அதேபோல், மகளிர் அணிகள் பிரிவிலும் ஜோதி, பர்னீத், அதிதி ஆகியோர் அடங்கிய அணி 234 - 233 என்ற கணக்கில் சீன தைபேவை வீழ்த்தி வாகை சூடியது.

காம்பவுண்ட் ஆடவர் தனிநபர் பிரிவு வெண்கலப் பதக்கச் சுற்றில் அபிஷேக் வர்மா 147 - 146 என்ற புள்ளிகள் கணக்கில் தென் கொரியாவின் ஜூ ஜேஹூனை சாய்த்து பதக்கம் பெற்றார்.

ரீகர்வ் ஆடவர் தனிநபர் பிரிவு காலிறுதியில் தீரஜ் பொம்மதேவரா 3-7 என தென் கொரியாவின் டாங் சியிடமும், தருண்தீப் ராய் 0-6 என தென் கொரியாவின் கிம் ஜே டோக்கிடமும் தோல்வி கண்டனர். மகளிர் தனிநபர் பிரிவு காலிறுதியில் பஜன் கௌர் 0-6 என்ற கணக்கில், உலகின் நம்பர் 1 வீராங்கனையான தென் கொரியாவின் லிம் ஷியோனிடம் தோல்வி கண்டார். திஷா புனியா 1-7 என சீனாவின் ஹாய் லிகனிடம் வெற்றியை இழந்தார்.

தற்போதைய நிலையில் இப்போட்டியில் இந்தியா மொத்தமாக, 3 தங்கம், 1 வெள்ளி, 5 வெண்கலம் என 9 பதக்கங்கள் வென்றிருக்கிறது.

EVA STALIN IAS ACADEMY